கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்!

இயேசு
உங்களை
நேசிக்கிறார்

பிப்ரவரி, 2026



அனையாது
அலைந்து தேடுகிறதைப்பார்க்கிலும்
கண் கண்டதே நலம்!

FEBRUARY 2026

தேவனுடைய கிருபையினால்

இயேசு நேசிக்கிறார் ஊழியங்கள்

32 ஆண்டுகள் நிறைவுசெய்து

33வது ஆண்டு சேவை ஆரம்பம்!



இயேசு நேசிக்கிறார் ஊழிய ஆரம்ப நாள்



ஊழிய ஆரம்ப அலுவலகம்



எழுப்புதல் ஜெப மையம் - விருதுநகர்

பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். - சகரியா 4:6

சகோதரன் ஜெ. ஆலன்பால் அவர்கள் தனது 12ஆம் வயதில் இரட்சிக்கப்பட்டார்கள். சிறுவயதிலேயே வரங்கள், வல்லமைகளைப் பெற்று ஆத்தும பாரத்தோடு ஊழியம் செய்யத் துவங்கினார்கள்.

பின்பு 1994ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் தேதி முழு நேரமாகத் தேவனுடைய அழைப்பிற்கு இணங்க முழு நேரமாகத் தன் ஊழியத்தைத் துவங்கினார்கள். 1995ஆம் ஆண்டு திருமணமான பின்பு குடும்பமாகக் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்கள். ஆசீர்வாதம் டிவி, ஆசீர்வாதத் திருச்சபை ஊழியங்கள் என்று வளர்ந்து பெருகியிருக்கின்ற இந்த ஊழியங்களுக்காகக் கர்த்தரைத் துதியுங்கள்.



சிறப்புச் செய்தி



ஆசையானது அலைந்து தேடுகிறதைப்பார்க்கிலும் கண் கண்டதே நலம்!

"ஆசையானது அலைந்து தேடுகிறதைப்பார்க்கிலும் கண் கண்டதே நலம்; இதுவும் மாயையும், மனதைச் சஞ்சலப்படுத்துகிறதுமாயிருக்கிறது" – பிரசங்கி 6:9

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, வாக்குத்தத்தங்கள் நமக்கு அநேகம் இருந்தாலும் நாம் சத்தியத்தை மேய்ந்துகொள்ள வேண்டும்.

"நீ தேசத்திலே குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" (சங்கீதம் 37:3) என்று சொல்லுகிறது. இந்தப் பூமியிலே ஆண்டவர் உங்களை வாழ வைக்கும் நாட்களில் நீங்கள் சத்தியத்தைச் சேகரிக்கிறீர்கள்.

முன்பு சிறுபிள்ளைகள் stamp collect பண்ணுவதை வழக்கமாக வைத்திருப்பார்கள். அவர்கள் வீட்டிற்கு வரும் தபால்களில் உள்ள stampகளை எடுத்து ஒரு நோட்டில் ஒட்டி வைப்பார்கள். நானும் சிறுவயதில் அதைச் செய்திருக்கிறேன்.

அதைப்போல நீங்கள் சத்தியத்தைச் சேகரிக்க வேண்டும். உங்களை வாழ வைக்கிற சத்தியத்தை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" –யோவான் 8:32. ஆண்டவர் சத்தியங்களை எழுதி வைத்திருக்கின்றார். இந்தச் சத்தியத்தை மாற்றுவதற்கு இந்த உலகத்தில் ஒரு மனிதனும் இல்லை. சத்தியம் சத்தியமே! "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்" – யோவான் 14:6 என்று ஆண்டவராகிய இயேசு மகாராஜா சொல்லுகிறார்.




சகோதரன் J. ஆலன்பால்

''நான் மெய்யாகவே ஒன்றான மெய்த்தேவனுடைய குமாரனாயிருக்கிறேன்" என்று ஆட்டுக்குட்டியானவர் மனிதர்களுக்குக் கூறினார். தேவன் தாமே மாம்சத்தில் வெளிப்பட்டவராக வந்திருக்கிறேன் என்று சொன்னார். அதுதான் சத்தியம்!

பிசாசு ஏன் விழுந்தான் என்றால் சத்தியம் அவனுக்குள் இல்லாதபடியினால் அவன் நிலை நிற்கவில்லை. சத்தியத்தை நீங்கள் உங்களுக்குள்ளே சேகரித்து வைத்துக் கொண்டீர்கள் என்றால் அது உங்களைப் பாவம் செய்ய விடாது.

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்



கொள்ளுகிறதினால்தானே." - சங்கீதம் 119:9

வசனத்தை நம்முடைய இருதயத்தில் நிறுத்தினால் உலகத்தால் கறைபடாமல், வேதனைப்படாமல் நீங்கள் மனரம்மியமாய் வாழ முடியும்.

ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம். சில நேரங்களில் மக்கள் மிகவும் எதிர்பார்க்கிறார்கள். உலகத்திலே சினிமா கொட்டகையில் போய் அமரும்போது அதில் வரும் நடிகைகளைப் பார்த்து, தங்களுக்கு வரவேண்டிய மனைவி இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இறுதியில் ஏமாற்றம் அடைகிறார்கள். ஆசையானது அலைந்து தேடுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் அந்தமான் தீவிற்கு ஊழியத்திற்குச் சென்றபொழுது, ஒரு கணவன், மனைவி வந்திருந்தார்கள். அந்த மனைவி என்னிடம், ''பிரதர், என் கணவர் என்னைப் பெண் பார்க்க வந்தார். பார்த்தவுடன் அவருக்குப் பிடித்துவிட்டது. ஆனால் அவர் வீட்டிற்குச் சென்றவுடனே அவரின் மனது மாறிவிட்டது. இதை விட ஒரு அழகான பெண்ணைத் தேவன் ஒருவேளை எனக்காக வைத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று அலைந்து திரிந்து தேடினாராம். பின்பு ஒரு ஆண்டுகாலம் முடிந்து, திரும்ப அதே நாளில் அந்தச் சகோதரனுக்கு ஒரு எண்ணம் வந்ததாம். நாம் அந்தப் பெண்ணைப் பார்த்தபோது, கர்த்தருடைய சித்தம் என்று மனதில் பட்டதல்லவா! இப்பொழுது நாம் தேவையில்லாமல் அலைந்து திரிந்து கொண்டு இருக்கிறோம் என்று யோசித்தாராம். பின்பு எங்கள் வீட்டிற்கு வந்து திருமணத்திற்கு சம்மதம் கூறினார். திருமணம் நேர்த்தியாய் நடந்தது" என்று கூறினார்கள்.

ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம். தேவன் உங்களுக்குக் கொடுத்தது

நல்லது, மற்றது நல்லதல்ல. தேவன் உங்களுக்கு நன்மையைத்தான் செய்வார் என்று நீங்கள் கற்றுக் கொண்டதில் நிச்சயித்து நில்லுங்கள்.

வாழ்க்கையின் எதிர்காலம்!

(அ). இம்மைக்குரிய ஆசீர்வாதம்!

(ஆ). மறுமைக்குரிய ஆசீர்வாதம்!

ஒரு திராட்சக்குலையை இரண்டு பேர் சுமந்துகொண்டு வரத்தக்கதான தேசத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கர்த்தர் கொடுத்தார். அந்தத் தேசத்தை வேவுப் பார்க்கச் சென்றவர்கள் சுமந்து கொண்டு வந்தார்கள். ஆசீர்வாதமான தேசத்தை ஆபிரகாமின் சந்ததிக்குக் கொடுத்தார். பூமியிலே உச்சிதமானவைகளைக் கொடுக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆனால் நாம் இம்மைக்காக மாத்திரம் வாழக்கூடாது.

இம்மைக்காக மாத்திரம் ஒருவன் வாழுகிறவனாயிருந்தால், எல்லா மனிதர்களைப்பார்க்கிலும் பரிதவிக்கப் பட்டவனாயிருப்பான்.

ஆட்டுக்குட்டியானவர் நித்திய மணவாளனாய் இருக்கிறார். அவர் என்றென்றைக்கும் நம்மோடு இருக்கப் போகிறவர். நாம் அவரோடுபோய் என்றைக்கும் வாழுவதற்கு இந்தப் பூமியிலே நமக்கு ஒரு பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் முடிவிலே நாம் எந்த அளவு பயிற்சி பெற்றிருக்கிறோமோ அதற்கு ஏற்றாற் போல நம்மைப் பூரணப்படுத்தி விடுகிறார்.

நித்திய நியாயத்தீர்ப்பு கூறப்பட்ட பிறகு நாம் புதிதாக எதையும் சாதிக்க முடியாது. அதற்கு முன்பே நாம் ஊழியம் செய்ய வேண்டும். அதற்கு முன்பே நாம் தியாகமாக இருக்க வேண்டும். அதற்கு முன்பே கர்த்தருக்குப் பிரயோஜனமாக இருக்க வேண்டும். அதன்பின்பு நித்திய நியாயத்தீர்ப்பு இருக்கும். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்த்தெழுவான். நீங்கள் பரலோகராஜ்யத்திற்குப் போகும்போது உங்களுக்குரிய ஆசீர்வாதங்கள் மிகவும் மேன்மையுள்ளதாய் இருக்கும். அதற்கு நீங்கள் இந்த உலக ஓட்டத்திலே ஒரு தீர்மானம் எடுத்து ஓடுகிறவர்களாக இருக்க வேண்டும்.

நித்திய ஆசீர்வாதத்தில் உங்களுக்குரிய பங்கு என்ன?

ஒரு குறிப்பிட்ட சிறிய நாடு இருந்தது. அந்த நாட்டிற்கு ஒரு ராஜா இருந்தார். அந்த நாட்டில் 42 குடும்பங்கள் இருந்தன. அந்த ராஜா நாடு முழுவதையும் அவருடைய ஜனங்கள் வாழுவதற்கு இடம் கொடுக்கும்படி தீர்மானம் பண்ணினார். அந்த மக்கள், 'ராஜாவிடம் வந்து உங்களுக்கு ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். மீதியை 42 பங்காகப் போட்டு எங்களுக்குக் கொடுங்கள்' என்று



சொன்னார்களாம். 'அப்படியே ஆகக்கடவது' என்று சொன்னார். 42 பாகங்களாகப் பிரித்து எல்லோருக்கும் சமமாகக் கொடுத்துவிட்டார்.

அந்த ஊரில் ஒருவர் மருத்துவராக இருக்கிறார். ஒருவர் இன்ஜினியராக இருக்கிறார். ஒருவர் மரவேலைச் செய்கிற



தச்சனாக இருக்கிறார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் செய்கிற பணிக்கேற்ப மற்றவர்கள் அவர்களுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இவ்வாறு அந்த மக்கள் அழகாக வாழ்ந்து வந்தார்கள். சிங்கப்பூர் என்பது ஒரே ஊர், அதுதான் நாடாக இருக்கிறது. அதைப்போல இந்த 42 குடும்பங்கள் வசிக்கிற இந்த நாடு அருமையான ராஜ்யமாகத் திகழ்ந்தது.

உவமையில் வந்த அந்த ராஜாவுக்குச் சமானமாய் ஆட்டுக்குட்டியானவர் இருக்கிறார். இவரைச் சர்வத்திற்கும் சுதந்தரவாளியாகப் பிதா நியமித்திருக்கிறார். இப்படியே 42 குடும்பங்கள் இருப்பதைப்போல எத்தனையோ குடும்பங்கள் தனித்தனியாக இருக்கிறோம்.

உலகத்தோற்றத்திற்கு முன்னே அவரவர்களின் குடியிருப்பின் எல்லைகளைக் கர்த்தர் குறித்திருக்கிறார். அவர் கொடுத்த இடத்திலே வாழ்ந்து சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

1. ஏற்ற துணையைக் கர்த்தர் குறித்து வைத்திருக்கிறார்!

"எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்; இப்படிப்பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு."
– யோபு 23:14

ஒருவருக்குரிய ஏற்ற துணையைத் தேவன் குறித்து வைத்திருக்கிறார். நீங்கள் திருமணத் தகவல் மையத்தில் உங்கள் பெயரை இணைத்து, வரன் தேடும்பொழுது, உங்களுக்கென்று நியமித்தது அதில் இல்லையென்றால் அது உங்களுக்குக் கிடைக்காது. உங்களுக்கென்று நியமித்த இடத்திலே உங்களுக்குத் துணை கிடைக்கும்.

சென்னையில் நான் வீடியோ என்ஜினியராக இருந்து, ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்த நாட்களில் கன்வென்ஷன் கூட்டங்களுக்குச் சென்று செய்தி அளித்து வருவேன். பின்பாகவே அந்தப் பாஸ்டர் என்னைப் பார்க்க அலுவலகத்திற்கு வந்து விடுவார்கள். எனக்காக வரவேற்பறையில் காத்துக் கொண்டிருப்பார்கள். நான் அவரைச் சந்தித்து, "என்ன பாஸ்டர், இரண்டு

நாட்களுக்கு முன்புதானே கூட்டத்தில் பேசிவிட்டு வந்தேன். இப்பொழுது வந்திருக்கிறீர்கள். என்ன விஷயம், நான் ஏதாவது உங்களுக்குச் செய்ய வேண்டுமா?" என்று கேட்பேன்.

அதற்கு அவர், "நாங்கள் மிகவும் ஜெபம் பண்ணினோம். எல்லோரும் இணைந்து ஒரு தீர்மானம் பண்ணியிருக்கிறோம். உங்களுக்கு ஏற்றதுணை எங்கள் திருச்சபையில்தான் இருக்கிறது என்று சொல்வார்கள். அதைத் திட்டமாய்த் தெரிந்து கொள்ளுங்கள். அதைச் சொல்லுவதற்குத்தான் வந்தேன்" என்பார். அதைக் கேட்டு எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்பொழுது நான் ஆண்டவரிடம், ஆண்டவரே, "இப்படி வருகிறவர்களைச் சமாளிப்பதற்கு எனக்கு நல்ல ஒரு வழியைக் காண்பியும்'' என்று ஜெபித்தேன். எனக்கென்று வைத்திருக்கிற ஏற்றதுணையை எங்கு வைத்திருக்கிறீர் ஆண்டவரே என்று கேட்டேன். அதற்கு ஆண்டவர், உன் சொந்த ஊராகிய விருதுநகரிலே உனக்கு ஏற்ற துணையை வைத்திருக்கிறேன் என்று பேசினார். அதன்பின்பு யாராவது வந்து என்னிடம் திருமணத்தைக்குறித்து, துணையைக் குறித்துப் பேசும்போது, அது தேவசித்தமில்லை என்பதைக் கூறி விடுவேன். உடனே அவர் அதற்கு, "எப்படி உங்களுக்கு இது தெளிவாகத் தெரியும். ஜெபிக்காமல்கூட உடனே சொல்லுகிறீர்கள்'' என்று சொல்லுவார்கள். "இதற்காக ஏற்கெனவே ஜெபித்திருக்கிறேன். ஆண்டவர் என்னோடு பேசியிருக்கிறார்'' என்று சொன்னேன்.



ஒரு குறிப்பிட்ட நாளிலே நான் பரப்பாடியில் ஊழியம் செய்து கொண்டிருந்தபொழுது, என்னுடைய மம்மியிடம் சோபியினுடைய தாயார் போய், தன் மகளின் திருமணத்தைக் குறித்த தேவசித்தம் என்ன என்று கேட்கப் போனார்கள். "அயல்நாட்டில் வேலை பார்க்கும் ஒரு மாப்பிள்ளை வந்திருக்கிறார். அவ்வளவு தூரமாய்க் கொடுப்பதற்கு தனக்கு விருப்பமில்லை. பிரதர் ஆலன்பால் அவர்களிடம் ஜெபம்பண்ணி இதைக்குறித்த தேவ சித்தத்தைக் கேட்டுச் சொல்லுங்கள்'' என்றார்களாம். அப்பொழுது என்னுடைய மம்மிக்கு இதுதான் நம்முடைய மகனுக்கு ஏற்றதுணையாகத் தோன்றுகிறது என்று சொல்லி, அன்று சாயங்காலமே சோபியைப் பார்ப்பதற்கு அவர்கள் வீட்டிற்கு என்னுடைய மம்மி சென்றார்கள். அவர்கள் சென்றபொழுது, சோபி ஆயிரம் ஸ்தோத்திரபலிகள் தேவனுக்குச் செலுத்திவிட்டு மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். அதைப் பார்த்தவுடனே எனது மம்மி மனதில் தீர்மானித்தார்கள்.

பின்பு நான் ஏழு நாட்கள் உபவாசம் பண்ணி ஆண்டவரிடம் சோபியைக் குறித்துக் கேட்டேன். அப்பொழுது கர்த்தர், ''சோபிதான் என்

வாழ்க்கைக்கு ஏற்றதுணையென்று எனக்குத் தரிசனத்திலே வெளிப்படுத்தினார்." அப்பொழுது நான் அவளை என்னுடைய வாழ்க்கைத் துணையாய் ஏற்றுக் கொண்டேன். இதுதான் தேவனுடைய வழி!

நீங்கள் அனாதையாய் இருக்கிறீர்கள் என்றால், உங்களுக்கு வழி வித்தியாசமாய் இருக்கும். உங்களுடைய பொறுப்பாளரை மையமாக வைத்து ஓடலாம். மொர்தெகாய் ஒரு பொறுப்பாளராக இருக்கிறார். முந்தின நாட்களில் எஸ்தர் கீழ்ப்படிந்ததைப்போல பட்டத்திற்கு ராணியாகச் சென்ற பொழுதிலும், கீழ்ப்படிகிறவளாய் இருந்தாள்.

உங்களுக்கான பொறுப்பாளர்களே இல்லையென்றால், நீங்கள் ஜெபித்துத் தெரிவு செய்யுங்கள். கர்த்தர் உங்களுக்குத் தரிசனம் தருவார். கர்த்தர் உங்களோடு பேசுவார். கர்த்தர் உங்களுக்குச் சொப்பனம் தருவார். தெளிவாக உங்களைக் கர்த்தர் நடத்துவார். இந்த வழியில் போகிறவர்கள் பேதைகளாக இருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.

திடீரென்று சிம்சோனுக்கு ஒரு ஆசை வந்தது. அவர்களை ஆண்டுகொண்டிருந்த பெலிஸ்தர் தேசத்தில் இருக்கிற ஒரு அழகான பெண்தான் வேண்டும் என்று பெற்றோர்களிடம் சொல்லி, பெண் பார்க்கப் புறப்பட்டுப் போனார்கள்.



"அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள்." – நியாயா. 14:4

''இஸ்ரவேலில் இல்லாத பெண்களா? இப்படி சிம்சோன் பெலிஸ்தர் தேசத்திலே பெண்ணைத் தெரிவு செய்திருக்கிறான்'' என்று புலம்பி இருக்கலாம். ஆனால் அது கர்த்தரின் செயலாக இருந்தது. கர்த்தர் தெரிவு செய்திருக்கிற நபர் எங்கேயிருந்தாலும் அதற்கு நலம், பொலம் ஒன்றும் சொல்லாமல் இருக்க வேண்டும்.

ஒருவேளை நீங்கள் ஆசிரியராக இருந்தால் உங்களுக்கு வருகிற துணை ஆசிரியராகத்தான் இருக்க வேண்டும் என்று உங்கள் மனதில் கட்டுப்பாடு விதிக்க வேண்டாம். தேவன் என்ன தீர்மானித்து இருக்கிறாரோ, அதுதான் உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற துணையாக இருக்கும். உங்கள் கணவனானாலும், மனைவியானாலும் கர்த்தர் சித்தப்படி அமையும் வாழ்க்கை எந்நாளும் மகிழ்ச்சியாக இருக்கும். ஆசையானது அலைந்து திரிகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம்.

''பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.'' – நியாயா. 16:1

சிம்சோனின் மனைவி கொல்லப்பட்டுவிட்டாள். அவன் ஒரு நியாயாதிபதியாயிருந்தான். மனைவி இறந்தபின், 'நீதிபதி சிம்சோனின் மனைவி இறந்துவிட்டாள். ஆகவே அவருக்கு ஒரு பெண் வேண்டும்' என்று தண்டரா போட்டிருந்தால் பெண்கள் திருமணத்திற்காக வரிசையில் வந்து நின்றிருப்பார்கள். அவருக்கு அவ்வளவு பலம் இருந்தது. அதை எல்லோரும் அறிந்திருந்தார்கள். அப்படிச் செய்திருந்தால் அவருக்கு ஒருவேளை ஒரு ஏற்றதுணை கிடைத்திருக்கும்.

வாழ்க்கையில் ஆயுசு காலங்கள் என்பது வித்தியாசமானதாக இருக்கலாம். ரூத்தின் கணவர் இறந்துவிட்டார். ரூத்தை ஆண்டவர் அப்படியே விட்டுவிடவில்லை. போவாஸைக் குறித்து தேவன் வேதத்தில் எழுதி வைத்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு எல்லையில் தேவசித்தம் என்று ஒன்று இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை தொடரவேண்டும் என்பதற்காகத்தான்!

மறுமணம் முடித்தால் மற்றவர்கள் ஏதாவது சொல்லிவிடுவார்களோ, என்று எங்காவது அலைந்து திரிந்துகொண்டு இருக்கக்கூடாது. இறுதியில் சிம்சோனை அந்தச்சூழ்நிலை வேசியினிடத்தில் கொண்டுபோய்விட்டது.

"அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்." – நியாயா. 16:4

இவருடைய ஆசை சிம்சோனை அலைய வைக்கிறது. ஆற்றங்கரைக்குச் செல்லுகிறார். அங்கேயிருந்த தெலீலாள் என்கிற பெண்ணோடு சிநேகம் வைக்கிறார்.

அநேகர் ஏராளமான சிநேகிதர்களை/ சிநேகிதிகளைச் சேர்க்க வேண்டுமென்று ஓடுகிறார்கள். Girl Friend & Boy Friend என்று வேதம் கற்றுக் கொடுக்கவில்லை. வேதம் மனைவியைக் குறித்து 'உடன்படிக்கையின் தோழி'' என்று குறிப்பிடுகிறது. அவர்களிடம் அமர்ந்து பேசுங்கள்.

ஆனால் இந்தக் காலத்தில் அநேக நண்பர்களைச் சேர்ப்பதற்கு Social Media - Instagram, Facebook ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.

நீங்கள் வைத்திருக்கிற தொழிலை / கடையைப் பற்றி தெரியப்படுத்த Social Media - Instagram, Facebook ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். அதில் தவறில்லை. ஆனால் தங்களை வெளிப்படுத்துவதற்காகப் பலர் ஓடுகிறார்கள். அதில் அநேகர் தவறு செய்கிறார்கள். இந்த ஆசையில் நீங்கள் ஓடினால் திருப்தி என்பது வரவே வராது.

வெங்காயத்தை உரித்துக் கொண்டு உள்ளே ஏதோ ஒன்று இருக்கிறது என்று தேடிக் கொண்டு போகிறவர்களுக்கு, எல்லாவற்றையும் உரித்தாலும் அது தோலாகத்தான் இருக்கும். கடைசியில் வெங்காயமே இருக்காது.

அதைப்போல் தான் உலகத்தில் உள்ள சிற்றின்பங்களும் இருக்கிறது. எங்கேபோய் எதைத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. இப்படி

ஆசையாய் அலைந்து ஓடுகிற எல்லையில் மரணம் காத்திருக்கிறது.

உலக சிநேகத்தில் பின்னால் மறைந்திருப்பது பிசாசின் வலை! நீங்கள் உன்னதமானவருடைய மறைவில் இருந்தால் உங்களை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் உங்களைத் தப்புவிப்பார்.

சிம்சோன் தன்னிடமிருந்த பெலத்தை வைத்து அருமையாக வாழ வேண்டிய நபர், கண்கள் பிடுங்கப் பட்டவராக, தலைமுடி சிரைக்கப்பட்டவராக மாவரைத்துக் கொண்டிருப்பவராக, வேடிக்கைக் காட்டுகிற ஜோக்கராக மாறி விட்டார்.

அன்பு தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் உங்களுக்குக் குறித்திருக்கிற ஓட்டத்திலே அருமையாக ஓடுங்கள். ஆசையானது அலைந்து திரிவதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம். கர்த்தர் கொடுத்த ஒவ்வொரு நன்மையையும் எண்ணிப் பாருங்கள். நல்ல மனிதன் தன்னில்தான் திருப்தியடைவான்.

2. ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.'' - 1கொரி. 12:27

உங்கள் சுண்டு விரல் நான் பெரு விரலைப்போல மாற வேண்டும் என்று எண்ணுகிறது. பெருவிரலுக்கு மட்டும் தேவன் எவ்வளவு காரியங்களைக்



கொடுத்திருக்கிறார் என்று எண்ணி, இரவும் பகலும் சுண்டு விரல் ஜெபித்து வீக்கமானால் எப்படியிருக்கும் பாருங்கள். அந்த விரலைப் பார்க்கிறவர்கள் உனக்கு நெகசுத்தி வந்திருக்கிறது, மருத்துவரிடம் சென்றால் அதைக் குத்தி சரிசெய்வார், வீக்கம் சரியாகிவிடும் என்பார்கள். சுண்டு விரல் பெருவிரல் போல் மாற வேண்டும் என்று எண்ணக்கூடாது.

கால், 'என்னை மட்டும் தரையில் நடக்கவிடுகிறார்கள். அவர்கள் மட்டும் மேலே இருக்கிறார்கள்' என்று நினைத்தால் என்ன ஆவது? காலானது சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறது. கால் தாழ்மையை ஏற்று நடக்கும்படித் தேவன் வடிவமைத்து வைத்திருக்கிறார்.

ஒவ்வொரு தானியத்திற்கும் தேவன் தமது சித்தத்தின்படி மேனியைத் தருகிறார். சரீரத்தைத் தேவன் வடிவமைக்கிறார். ஒரு சிறு குழந்தைப் பிறந்து வளர்ந்து வரும் மேனியைத் தேவன் வடிவமைத்து வைத்திருக்கிறார்.

காலானது அது இருக்கிற இடத்தில் இருக்கிறபடி அவனவனுக்குத் தேவன் அழைத்த அழைப்பு என்று ஒன்று இருக்கிறது. இருதயம் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்.

அதைப்போல உங்களைத் தேவன் ஒரு நோக்கத்தோடு அழைத்திருக்கிறார். எதற்காக நீங்கள் தேவனால் பிடிக்கப் பட்டிருக்கிறீர்களோ, அதிலே ஆசையாய்த் தொடருங்கள். மற்றவர்களைப் பார்த்தவுடனே அவர்களைப் போல மாற வேண்டும் என்கிற ஆசை உங்களுக்கு இருக்கக்கூடாது.

தேவனுடைய பிள்ளைகளோ, தங்கள் ஆசை இச்சைகளைச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். இருதயத்தின் விருப்பத்தை ஆண்டவர் நிறைவேற்றுவார். ஆசை, இச்சை இரண்டும் தவறான காரியங்கள். அவைகளைச் சிலுவையிலே அறைய வேண்டும். உபவாசமிருந்து அவருடைய பாதத்தில் அமர்ந்து அழுது ஜெபிக்கும்போது, ஆசை இச்சைகளைச் சிலுவையில் அறைந்து நொறுக்கியதைப் போலிருக்கும். நீங்கள் ஜெயமாய் நிற்க முடியும்.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அவயவங்களாக இருக்கிறோம். மற்றவர்களைப்போல நாம் இருக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. மற்றவர்களைப்போல இருக்க வேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புவார்கள்.



நான் வீடியோ என்ஜினியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபொழுது, சென்னைக்கு வெளிநாட்டிலிருந்து ஒரு பெரிய ஊழியர் வந்தார். எல்லா ஊழியர்களும் ஒற்றுமையாய் இணைந்து வந்திருந்தாலும், அந்தக் கூட்டத்திற்கு அதிகமாக விளம்பரங்கள் செய்திருந்தபடியினால் கடற்கரை மணலத்தனையாய் ஜனங்கள் திரளாய்க் கூடி வந்திருந்தார்கள். அப்பொழுது எல்லோரும், தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊழியர்களையும்விட இவர் மிகவும் மேன்மையுள்ளவராக இருக்கிறாரே! என்று எண்ணினார்கள். அந்தக் கூட்டம் முடிந்துவிட்டது.

அதன்பின்பு இங்கிருந்த ஊழியர்கள் எல்லோரும் அற்பமாய் எண்ணப்பட்டார்கள். வெளிநாட்டிலிருந்து வந்த ஊழியருடைய குடும்பத்தில் கூட்டம் முடிந்த ஒரு வாரத்திற்குள்ளாக ஒரு பெரிய தவறு நடந்திருந்தது. அதனால் இவருடைய ஊழியமே ஸ்தம்பித்து நின்றுவிட்டது. மிகவும் வேதனையான நிலைமையில் அந்த ஊழியர் இருந்தார். ஒருவரைப் பார்த்து மற்றவர்களை எடைப் போடக்கூடாது. மற்றவர்களைப் பார்த்து, அவர்களைப்போல நான் இருக்க வேண்டும் என்று ஓடக்கூடாது.

நீங்கள் ஒரு அவயவமாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு அவயவத்திற்கும் ஒவ்வொரு தொழில் உண்டு. வாயானது பேசவும், உணவு உட்கொள்ளவும் பயன்படுகிறது. மூக்கானது நுகரவும்,

சுவாசிக்கவும் பயன்படுகிறது. காதானது கேட்கப் பயன்படுகிறது. உங்களைத் தேவன் ஒரு காரியத்திற்காக அழைத்திருக்கிறார்.

"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்." - பிலிப்பியர் 3:12

இந்த உலகத்திலே ஆண்டவர் உங்களை எதற்காகப் பிடித்திருக்கிறாரோ, அதை நிறைவேற்றுவதில் ஜாக்கிரதையாய் இருங்கள். அதுதான் வாழ்க்கை. அதைத் தாண்டி வாழ்க்கையில் இருப்பதுதான் உலகத்தின் ஆவி கொடுக்கிற ஆசை.

உலகத்தின் ஆவி உங்களை வெவ்வேறு மனிதனைப்போல வாழ வைக்க வேண்டுமென்று சொல்லி தூண்டி கொண்டேயிருக்கும். மாறாக, நீங்கள் வேதத்திலுள்ள மோசேயைப்போல இருக்க வேண்டுமென்று எண்ணுங்கள். கொர்நேலியுவைப்போல குடும்பத்தோடு



தேவனை ஆராதிப்பவரைப்போல இருங்கள். உற்றார், உறவினர்களைச் சேர்த்து ஆராதிக்கிறவர்களாக இருங்கள். இவைகள் வேதத்தில் எழுதப்பட்டுள்ள முன்மாதிரிகள். இதில் ஒன்றைப்போல வாழுங்கள். இவையெல்லாவற்றையும் விட நீங்கள் நீங்களாக வாழ விரும்புங்கள். உங்களுக்கென்று தேவன் ஒரு அருமையான வாழ்க்கையை வைத்திருக்கிறார்.

நான் வீடியோ என்ஜினியராகப் பணியாற்றிய இடத்திலிருந்த ஊழியர் அன்பையும் மனதுருக்கத்தையும் பற்றிப் பேசுவார். என்னுடைய பிரசங்கங்கள் அந்த பாதையில் போகவேயில்லை. என்னுடைய வார்த்தைகள் சத்தியத்தைச் சத்தியமாக எடுத்துக் கொடுப்பதாகத்தான் இருக்கும். இன்றைக்கும் தேவன் அப்படியே வைத்திருக்கிறார்.

உங்களுக்கென்று தேவன் ஒரு அழைப்பை வைத்திருக்கிறார். பரிசுத்த வேதத்தில் எழுதியிருக்கிற அருமையான சாட்சிகளைப்போல நீங்களும் அருமையான சாட்சிகளாய் எழும்பமுடியும் என்று நம்புங்கள். உங்களுக்கென்று தேவன் ஒரு தனித்தன்மையை வைத்திருக்கிறார். அதிலே நீங்கள் நடக்கத் தீர்மானம் பண்ணுங்கள்.

3. "மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்த தேபாது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே." - 1தீமோத்தேயு 4:14

கர்த்தர் உங்களை எதற்கு

அழைத்திருக்கிறார் என்பதை இரண்டு விதங்களிலே உங்களுக்குக் காட்டிக் கொடுப்பார்.

1. சிம்சோன் பள்ளத்தாக்கில் சென்று கொண்டிருந்தபொழுது ஆவியானவர் அவரை ஏவத் துவங்கினார். இப்படி நட, இப்படி இரு என்ற ஏவுதல் தானாய் வரும்.

2. உங்களுக்காக யாராவது அதிகமாக ஜெபிக்கும்போது அந்த அழைப்பு வெளிப்படும். எப்படியென்றால் தீர்க்கதரிசனத்தினால் உங்களுக்கு வெளிப்படுத்தப்படலாம்.

நான் 15 வயது பையனாக இருந்தபொழுது, மதுரைக்கு ஒரு உபவாசக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். கூட்டம் முடிந்தபின்பு அந்த ஊழியக்காரர் என்மேல் கைகளை வைத்தபோது, அவருடைய கைகள் நடுங்கியது. தேவ வல்லமை என்மேல் பலமாக இறங்கியது. முழுவதும் என்னை நிரப்பியது. இதோ, "உன்னை இந்தியாவுக்கு ஆசீர்வாத வாய்க்காலாக வைப்பேன்" என்று சொன்னார். இன்றைக்கும்கூட எங்களுடைய அழைப்பு ஆசீர்வாதம் டிவி, ஆசீர்வாதத் திருச்சபை என்றுதானே இருக்கிறது. அன்றைக்கு அந்த ஊழியர் கூறினார். இன்றைக்கு அதில்தான் தேவன் எங்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

இதைப்போல உங்களுக்கும் தீர்க்கதரிசனத்திலே உங்கள் அழைப்பு வெளிப்படும். அதைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

3. தேவசெய்தியை நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும்போதும் உங்களுக்குரிய அழைப்பு வெளிப்படலாம்.

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, ஆண்டவர் உங்களுக்கு ஒரு அருமையான அழைப்பு, ஒரு தீர்மானம், ஒரு திட்டம் வைத்திருப்பார். அதை ஏதாகிலும் ஒன்றைக் கொண்டு உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

4. ஒருவேளை பரியாச உதடுகளினாலும் உங்களுக்கென்று குறித்திருக்கிற, அழைத்திருக்கிற, தெரிவு செய்திருக்கிறதைக் கர்த்தர் வெளிப்படுத்துவார். அதை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுங்கள்.

5. வேதம் வாசிக்கும்போது, உங்களுக்குரிய அழைப்பைக் கர்த்தர் வெளிப்படுத்துவார். அதை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு ஓடுங்கள். கர்த்தர் உங்களை எதற்காகப் பிடித்திருக்கிறாரோ, அதை ஆசையாய்த் தொடர்ந்து ஓடுங்கள்! ஆமென்!



■

19 வருட மூலவியாதியைக் கர்த்தர் சுகமாக்கினார்!



எனக்கு 19 ஆண்டுகளாக மூலவியாதி இருந்தது. அதினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். மருத்துவ சிகிச்சை எடுத்தாலும் பூரண சுகம் கிடைக்கவில்லை. மாத்திரைச் சாப்பிடும்போது சரியாகும். திரும்பவும் இந்த வியாதி வந்துவிடும். இந்தச் சூழ்நிலையில் நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் தொடர்ந்து கலந்துகொண்டு வந்தேன். அப்படி ஒருநாள் கூட்டத்திற்கு வரும்போது பேருந்தில் 7 பேர்தான் இருந்தோம். ஆனாலும் என்னால் அமர முடியாத சூழ்நிலையில் நின்று கொண்டு வேதனையோடுதான் வந்தேன். கடுமையான வலியினாலும், இரத்தப்போக்கினாலும் மிகவும் கஷ்டத்தோடு கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். கூட்டம் நடக்கிற நேரத்திலும் உட்கார முடியாமல் நின்றுகொண்டேதான் இருந்தேன். ஜெபவேளையில் சகோதரன், "மூலவியாதி உங்களை விட்டு நீங்குகிறது" என்று கூறினார்கள். நானும் அந்த வார்த்தையை விசுவாசித்து ஜெபித்துவிட்டு, வீட்டிற்குப் பேருந்தில் திரும்பினேன். பேருந்தில் மிகவும் கூட்டமாக இருந்தது. ஆனாலும் நான் அமர சீட் கிடைத்தது. அமர்ந்து கொண்டு பிரயாணம் பண்ணினேன். எந்த வலியும், வேதனையும், எரிச்சலும் இல்லை. அன்றைக்கே கர்த்தர் எனக்குப் பூரண சுகம் கொடுத்தார். அன்றிலிருந்து இன்று வரை நான் பூரண சுகத்தோடு இருந்து வருகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோ. ஜான்சன் விஸ்வநாதன், திருவொற்றியூர்.

ஊழியங்களில் கர்த்தர் செய்த கிரியைகள்!



ஒவ்வொ
சென்னையில் ந
ஆசீர்வாதம் டிவியின் உபவாச
திரளான ஜனங்கள் கலந்து கொண்டு, ஆவி
சரீரத்தில் விடுதலையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொ

GLORY TO GOD!

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்!

சென்னை உபவாசக் கூட்டம் 31.1.2026



வெளியே அமர்ந்திருந்த தேவப்பிள்ளைகள்

ரு மாதமும்
டைபெறுகிற
க் கூட்டத்தில்
, ஆத்துமா,
ள்கிறார்கள்.

GLORY TO GOD!

நமது ஊழியங்களில் கர்த்தரின் கிரியைகள்!

14 வருடங்களுக்குப் பின் இரட்டைக் குழந்தைகளைக் கொடுத்தார்!



என்னுடைய மகளுக்கு 14 வருடங்களாகக் குழந்தைபாக்கியம் இல்லை. ஒவ்வொரு மாதமும் நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு என் மகளுக்குக் குழந்தைபாக்கியத்திற்காகக் கண்ணீரோடு ஜெபித்து வந்தேன். ஒருமுறை ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டபோது, அதில் சகோதரன், "சில காரியங்கள் உங்களுக்குத் தாமதம் ஆவதைப்போல தெரியலாம். சிறு பிள்ளைகளுக்குக் காபியைச் சூடாகக் கொடுத்தால் என்ன நடக்கும். அதை ஆறவைத்துத்தானே கொடுக்க முடியும். அதைப்போல சில காரியங்களை ஆறவைத்துத் தேவன் உங்களுக்குத் தருவார்" என்று கூறினார்கள். அந்த வார்த்தையைக் கேட்டபோது, என்னுடைய துக்கம் நீங்கி, விசுவாசம் வந்தது. விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபித்தேன். கர்த்தர் அற்புதமாக என் மகளுக்கு, ஒரு ஆண் பிள்ளையையும், பெண் பிள்ளையையும் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி ஆதிரை, கேளம்பாக்கம்.

பில்லி சூனியக் கட்டிலிருந்து விடுதலை!



நான் 6 மாதங்களாக மாந்திரீகக் கட்டினால் பாதிக்கப் பட்டிருந்தேன். சரீரத்தில் மிகுந்த பெலவீனம் காணப்பட்டது. காதில் அதிகமாகச் சீழும் இரத்தமும் வடிந்தது. தலையில் பயங்கரமான வலி இருந்தது. நரம்பு பிரச்சனையும் இருந்தது. மருத்துவமனைக்குச் சென்று ஊசிப்போட்டு வருவேன். இரண்டு நாட்கள் நன்றாக இருக்கும். திரும்ப வேதனை வந்துவிடும். இப்படியே தொடர்ந்து 6 மாதங்கள் சரீரம் முழுவதும் வேதனையாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு, விடுதலைக்காகக் கண்ணீரோடு, பொருத்தனைபண்ணி ஜெபித்தேன். ஜெபவேளையில் சகோதரன், "பில்லி சூனியக் கட்டுகள் இப்பொழுதே உடைவதாக" என்று சொல்லி ஜெபித்தார்கள். அப்பொழுது தேவனுடைய வல்லமை என்மேல் இறங்கியது. என்னிடமிருந்து பிசாசு வெளியேறியதை நான் பார்த்தேன். அன்றிலிருந்து பூரண விடுதலையைப் பெற்றுக் கொண்டேன். பொருத்தனை காணிக்கையைச் செலுத்திவிட்டேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி கலைவாணி, ராணிப்பேட்டை.

குழந்தைக்கு வலிப்பு வியாதி வராமல் பாதுகாத்தார்!



எனக்கு 2021ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. குழந்தைபாக்கியத்திற்கு தாமதமானது. ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். அதில் பாக்கியவதி புத்தகத்தை வாங்கிச் சென்று, ஒரு மாதம் படித்தேன். அடுத்த மாதமே நான் கர்ப்பம் தரிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். நார்மல் டெலிவரியில் குழந்தையைப் பெற்றெடுக்கக் கர்த்தர் கிருபை செய்தார். 11வது மாதம் ஆனபோது குழந்தைக்கு வலிப்பு வந்தது. குழந்தைக்குக் காய்ச்சல் வரும்போதெல்லாம் வலிப்பு வரும். ஆகவே குழந்தையைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று மருத்துவர் கூறினார். அதனால் நான் ஆண்டவரிடம், "ஆண்டவரே என் மகனுக்கு ஒருபோதும் இந்த வலிப்பு வியாதி வரக்கூடாது. என்னை சபை நடுவே சாட்சியாக நிறுத்தும்" என்று கண்ணீரோடு ஜெபித்தேன். இப்பொழுது அவனுக்கு 4 வயதாகிவிட்டது. இதுவரை வலிப்பு எதுவும் வராமல் கர்த்தர் பாதுகாத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி ஹேமலதா, பட்டாளம்.

கணவருக்கு 35 வருடக் குடிப்பழக்கத்திலிருந்தும், புகைக்கும் பழக்கத்திலிருந்தும் விடுதலை!



என்னுடைய கணவர் 35 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கும் சிகரெட் பழக்கத்திற்கும் அடிமையாக இருந்தார். அதினால் குடும்பத்தில் சமாதானம் இல்லை. பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். என் கணவர் வீட்டிற்குப் பணம் கொடுப்பதேயில்லை. அதனால் மிகவும் மனம் உடைந்துபோய் இந்த வாழ்க்கை வேண்டாம் என்று சொல்லி என்னுடைய அம்மா வீட்டிற்குப் போய்விட்டேன். நான் ஆசீர்வாதம் டிவியைத் தினமும் பார்த்துக் கொண்டேயிருந்தேன். எனக்கு மிகவும் ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தது. "கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்புவார்" என்று வாக்குத்தத்தம் கொடுத்தார். அந்த வாக்குத்தத்த வசனம் தான் 2021ஆம் ஆண்டு காலண்டரிலும் அதே வசனத்தைக் கொடுத்து நடத்தி வந்தார். இப்பொழுது என்னுடைய கணவர் குடிப்பதே இல்லை. சிகரெட் புகைப்பதும் இல்லை. எவ்வளவோ சொல்லியும் நிறுத்தாதவரை அவருடைய வாக்குத்தத்த வசனம் நிறைவேறும் நேரத்தில் அவர் இந்தப் பழக்கத்திலிருந்து பூரண விடுதலை பெற்றுக் கொண்டார். கர்த்தர் என் கணவருக்குக் குடிப்பழக்கத்திலிருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார். இப்பொழுது நாங்கள் குடும்பமாகச் சந்தோஷமாக இருக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி உஷா, திருப்பரங்குன்றம்.

கணவருக்கு 18 வருடக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை!



என்னுடைய கணவர் 18 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். நாங்கள் ஒவ்வொரு மாதமும் குடும்பமாக ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து ஜெபித்தோம். ஒருநாள் உபவாசக்கூட்டத்தில் சகோதரன், "குடிக்கிற மனிதன் தன்னுடைய பிள்ளைகளின் நன்மைகளைத் திருடுகிறான்" என்று கூறினார்கள். அன்றைக்குத் தேவன் என் கணவரை அந்த வார்த்தையின் மூலம் தொட்டார். அன்றிலிருந்து என் கணவர் குடியை விட்டுவிடக் கர்த்தர் கிருபை செய்தார். குடியை விட்டு இப்பொழுதும் 2 வருடங்களாகிவிட்டது. நாங்கள் இப்பொழுது குடும்பமாகச் சந்தோஷமாக இருக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கடன் பிரச்சனையை மாற்றினார்!



2024ஆம் வருடம் எனக்கு மிகுந்த கடன் பிரச்சனை இருந்தது. 2025ஆம் வருடம் ஜனவரி மாதம் சகோதரன் மூலமாகத் தேவன், "நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியத்தை அறிவிப்பேன்" என்கிற வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்கள். அந்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்து அதைப் பற்றிக் கொண்டு ஜெபித்தேன். 2025ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக எல்லாக் கடன்களையும் அடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். கடந்த நாட்களில் மாதந்தோறும் வட்டி கட்டிக் கொண்டிருந்தேன். அதிலிருந்து தேவன் இப்பொழுது எனக்குப் பூரண விடுதலை கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி சங்கீதா.

3 மாத குழந்தைக்கு இருமலைச் சுகமாக்கினார்!



எனது 3 மாத குழந்தைக்கு 2 வாரங்களாக மிகுந்த சளி, இருமல் காணப்பட்டது. மருத்துவரிடம் சென்று காண்பித்தபொழுது, அநேக மருத்துவ சிகிச்சைகளைச் செய்தார்கள். ஆனாலும் சுகம் கிடைக்கவில்லை. பெரியவர்கள் இருமுவதைப்போல இருமுவான். குழந்தை மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். இறுதியாக மருத்துவர்கள் குழந்தையை மருத்துவமனையில் அட்மிட் பண்ணக் கூறினார்கள். எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆசீர்வாதப் பெருவிழாவில் சகோதரன், "பொருத்தனைபண்ணி ஜெபம் செய்யுங்கள்" என்று கூறினார்கள். அந்த வார்த்தைகளை விசுவாசித்து நான் பொருத்தனைபண்ணி ஜெபித்தேன். கர்த்தர் என் குழந்தைக்கு அற்புத சுகத்தைத் தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கர்ப்பப்பையில் அதிசயம் செய்தார் & அற்புதமாக ஆண் குழந்தை தந்தார்!



எனக்குக் கர்ப்பப்பையில் நீர்க்கட்டி இருந்தது. மருத்துவமனைக்குச் சென்றபொழுது, நீர்க்கட்டி நான்கரை இஞ்ச் அளவு இருக்கிறது என்று கூறினார்கள். என்னுடைய வயிறு மிகவும் வீக்கமாக இருக்கும். மிகுந்த வேதனையிருக்கும். ஆகவே கர்ப்பப்பையை எடுக்க வேண்டும். அல்லது ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று மருத்துவர் கூறினார். நான் ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனையிலும், உபவாசக் கூட்டத்திலும் கலந்துகொண்டு, "கர்ப்பப்பை எடுக்காதபடி அற்புதம் செய்யும் தேவனே" என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன். திரும்ப அடுத்த முறை மருத்துவரைச் சென்று பார்த்தபொழுது, ஆப்ரேஷன் வேண்டும், கர்ப்பப்பையை எடுக்க வேண்டும். 6000 ரூபாய்ப் பணம் செலுத்துங்கள். கர்ப்பப்பையில் ஒரு மருந்து வைப்போம். 5 வருடங்களுக்கு மாதவிடாய் வராது என்று கூறினார்கள். ஆனால் நான் ஆண்டவரிடம் ஜெபித்துவிட்டு, மருத்துவருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, சுகம் ஆகும் முன்னமே பொருத்தனையோடு, சந்தோஷமாய் 6000ரூபாய் காணிக்கைச் செலுத்தி விட்டு, விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்துச் சென்றேன். அதன்பின்பு நீர்க்கட்டி இருந்த இடமும் தெரியவில்லை. வலி எதுவும் இல்லை. நார்மலாக மாதந்தோறும் மாதவிடாய் வந்தது. எந்தக் கர்ப்பப்பையை எடுக்க வேண்டும் என்று சொன்னார்களோ, அதே கர்ப்பப்பையில் ஆண்டவர் எனக்கு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இரட்டிப்பான நன்மையைத் தந்தார்!



என்னுடைய மருமகளுக்கு 2020ல் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த 2 நாட்களில் குழந்தை இறந்தது. குழந்தையை ஐ.சி.யு வில் வைத்து எவ்வளவோ முயற்சி செய்தும் காப்பாற்ற முடியவில்லை. மிகவும் மனவேதனையோடு அழுதுக் கொண்டேயிருந்தோம். நிம்மதியே இல்லாமல் இருந்தது. என்னுடைய மருமகள் ஆண்டவர் மீது மிகவும் நம்பிக்கையோடு இருப்பாள். தினமும் 24 மணி நேரமும் ஆசீர்வாதம் டிவியை மட்டும்தான் பார்ப்பாள். ஆசீர்வாதம் டிவியைப் பார்த்து ஜெபித்துக் கொண்டேயிருப்பாள். ஒரு நாள் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் ஜெபிக்கும்போது, "மகளே, கர்த்தர் உனக்கு இரட்டிப்பான நன்மையைத் தருவார். நீ விசுவாசத்தோடு இரு, கலங்காதே நிச்சயமாகக் கர்த்தர் நன்மையைச் செய்வார்" என்று சொன்னார்கள். கர்த்தர், சகோதரன் மூலமாக மருமகளிடம் பேசினார். இந்த வார்த்தையை வைத்தே அவள் தினமும் ஜெபித்துக் கொண்டேயிருந்தாள். அழுது அழுது ஜெபித்துக் கொண்டேயிருப்பாள். "இயேசப்பா என்னுடைய மருமகளுக்குக் குழந்தைப் பாக்கியத்தைத் தாருங்கள்" என்று ஜெபித்தோம். ஜெபத்தைக் கேட்டு, 2023ஆம் ஆண்டு கர்த்தர் ஆண் குழந்தையைக் கொடுத்தார். மேலும் 2025ஆம் ஆண்டு இன்னொரு ஆண் குழந்தையைக் கொடுத்து, சகோதரன் சொன்னது போல இரட்டிப்பான நன்மையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தங்கைக்கு ஜீவனைக் கொடுத்தார்!



என் தங்கை லண்டனில் இருக்கிறாள். அவள் 2 மாதத்திற்கு முன்பு மிகவும் Seriousயான நிலைமையில் இருந்தாள். பேசக்கூட முடியாத நிலைமையில் இருந்தாள். அவள் கூட யாருமே இல்லை. 20 நாட்களாகச் சாப்பிடவே இல்லை. தண்ணீர் கூட குடிக்கவில்லை. நான் போன் பண்ணியும் எடுக்கவில்லை. நான் ஆசீர்வாதம் டிவியின் ஜெபஉதவியைத் தொடர்பு கொண்டு ஜெபித்தேன். உடனே அவளை லண்டனிலிருந்து திருச்சிக்கு அனுப்பிவிட்டார்கள். நாங்கள் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அவள் சாப்பிடவேயில்லை. வாந்தி எடுத்துக் கொண்டேயிருந்தாள். இன்னும் 1 வாரம் அங்கு இருந்தால் உயிரோடே பார்த்திருக்க முடியாது. கிருமிகள் அவள் உள் உறுப்புகளைத் தின்று கொண்டிருந்தது. நான் அவள் பக்கத்தில் உட்கார்ந்து தினமும் 1000 ஸ்தோத்திரபலிகளைச் சொல்லிக் கொண்டேயிருந்தேன். கர்த்தர் என்னுடைய தங்கைக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது நன்றாக இருக்கிறாள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஜோஸ்பின், திருச்சி.

தற்கொலை எண்ணத்தை மாற்றி கடனை அடைக்க உதவிச் செய்தார்!



எங்களுக்கு 10 லட்சம் கடன் இருந்தது. கடன் மத்தியில் நிறைய அவமானங்கள் ஏற்பட்டதால் நாங்கள் குடும்பமாக இறந்து விடலாம் என்று நினைத்தோம். அந்த நேரத்தில் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்தோம். சகோதரன் ஜெபிக்கும் போது, "நீ இழந்ததை விட இரட்டிப்பான நன்மைகளைக் காண்பாய்" என்று சொன்னார்கள். அந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி, "கர்த்தர் என்னோடு இருக்கிறார். நான் ஏன் சாகவேண்டும், கர்த்தர் எங்களைச் சாட்சியாக நிறுத்துவார்" என்று விசுவாசத்தோடு ஜெபித்தேன். நானும் என் மகளும் வேலைக்குச் சென்றோம். கடந்த வருடம் செப்டம்பர் மாதம் விருதுநகரில் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். நானும் என் மகளும் வந்து கண்ணீரோடு ஜெபித்துச் சென்றோம். 'கர்த்தர் எங்களைத் தற்கொலை எண்ணத்திலிருந்து விடுவித்து ஜீவனைக் காத்தார்' என்று சாட்சி சொல்லி விட்டுச் சென்றோம். அடுத்த ஒரு மாதத்திலே 3 லட்சம் ரூபாய்க் கடனை அடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். மேலும், என்னுடைய கணவருக்கு யூரின் போகும் இடத்தில் புண் வந்தது. மருத்துவமனைக்குச் சென்று மருந்து மாத்திரைச் சாப்பிட்டும் புண் ஆறவில்லை. பிறகு உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெப எண்ணெய் வாங்கிப் பூசி, ஜெபித்தோம். என்னுடைய கணவருக்குப் புண் சரியாகிவிட்டது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஜெபசெல்வி, சேலம்.

வேலையைக் கொடுத்து பொருளாதாரத்தை ஆசீர்வதித்தார்!



என்னுடைய மூன்றாவது மகள் வேலை பார்க்கிறாள். அவள் கொரோனா காலக்கட்டத்தில் படிப்பை முடித்ததால் குறைந்த வருமானத்தில் வேலை பார்க்கிறாள். நான் 2 வருடத்திற்கு முன்பு சென்னையில் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். மிகவும் சிரமப்பட்டுதான் வந்தோம். சகோதரன் ஜெப வேளையில், "நீங்கள் குறைவான படிப்பைப் படித்ததால் குறைவான சம்பளத்தில் வேலை பார்க்கிறீர்கள் என்று கவலைப்படுகிறீர்களா? கர்த்தர் இந்தப் படிப்பைக் கொண்டே உங்களை உயர்த்துவார்" என்று கூறினார்கள். 6 மாதத்திற்குள் என் மகளுக்கு பூனேயில் நல்ல ஐ.டி. கம்பெனியில் வேலை கிடைத்தது. நாங்கள் ஆட்டோவிற்குக்கூட பணம் கொடுத்து வர முடியாத நிலைமையில் இருந்தோம். ஆனால் இப்பொழுது கார் வாங்கிக் குடும்பமாக இந்த உபவாசக் கூட்டத்திற்குக் கர்த்தரை மகிமைப்படுத்த வந்திருக்கிறோம். மேலும், எனக்கு ஒரு வாரமாக முழங்கால் வலி அதிகமாக இருந்தது. நான் டெய்லரிங் கடை வைத்திருக்கிறேன். என்னால் உட்கார முடியாது. எழுந்திருக்க முடியாது. மிகவும் கஷ்டப்பட்டேன். நான் கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். நேற்று வரை மாத்திரைப் போட்டுத்தான் வந்தேன். இன்று என்னால் உட்கார முடியுமோ என்று எண்ணிக்கொண்டே வந்தேன். சகோதரன் ஜெப வேளையில், "முழங்கால் வலியில் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கர்த்தர் விடுதலையைக் கொடுக்கிறார்" என்று சொன்னார்கள். முழங்கால் வலி எப்படிச் சுகமானது என்றே தெரியவில்லை. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!– சகோதரி எஸ்தர் பிரமிளாவதி, தஞ்சாவூர்.

இருதய பிரச்சனையை நீக்கினார்!



எனக்கு 8 வருடத்திற்கு முன்பு இருதயத்தில் பிரச்சனை இருந்தது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது, "இருதயத்தின் வால்வுகளில் அடைப்பு இருக்கிறது" என்று டாக்டர்கள் சொன்னார்கள். அப்பொழுது ஆசீர்வாதம் டிவியின் ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். மூன்றாம் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெப வேளையில், "உங்களுடைய இருதயத்தின் அடைப்புகளைக் கர்த்தர் குணப்படுத்துகிறார். உங்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறார்" என்று சொன்னார்கள். அந்த நிமிடமே கர்த்தர் பெரிய விடுதலையைக் கொடுத்தார். இப்பொழுது வரை இருதய பிரச்சனை வரவேயில்லை. இப்பொழுது நான் எந்த மாத்திரையும் சாப்பிட வில்லை. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் எனக்குத் திருமணமாகுமா? என்பது பெரிய கேள்விக்குறியாக இருந்தது. ஆனால் கர்த்தர் எனக்கு நல்ல கணவரைக் கொடுத்தார். கடந்த ஒரு வருடமாக எங்களுக்குக் குழந்தை இல்லை. எனக்கு இருதயத்தில் பிரச்சனை இருந்ததால்தான் குழந்தை பிறக்கவில்லை என்று டாக்டர் சொன்னார். ஆனாலும் கர்த்தர் எனக்கு எல்லாத் தடையையும் நீக்கி அழகான ஆண் குழந்தையைக் கொடுத்து எங்களை ஆசீர்வதித்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

வறுமை நீங்கியது & ஆசீர்வாதம் வந்தது!



எங்களுக்குத் திருமணமானதிலிருந்து குடும்பத்தில் மிகுந்த வறுமைக் காணப்பட்டது. மிகுந்த கண்ணீரிலே எங்கள் வாழ்க்கைச் சென்றது. அது கொரோனா காலம் என்பதால் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். நான்கு மாதங்களுக்கு முன்பு ஆசீர்வாதம் டிவியைப் பார்த்தோம். ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டோம். மறுநாளே என்னுடைய கணவருக்குத் தேவன் ஒரு நல்ல வேலையைக் கொடுத்தார். அதற்குப்பின்பு 'எரிகோ விழும் ஏழுநாட்கள்' கூட்டத்தை டிவியில் பார்த்து ஜெபித்தோம். அதில் 4வது நாள் கூட்டத்தில் சகோதரன், 'தரித்திரத்தின் கட்டு உடைவதாக' என்று ஜெபித்தபொழுது, ஏதோ ஒன்று என் வயிற்றிலிருந்து கால் வழியாக இறங்கிச் சென்றதைப் பார்த்தேன். 7வது நாள் கூட்டத்தில் நேரடியாக வந்து கலந்துகொண்டு ஜெபித்துச் சென்றோம். திரும்ப வீட்டிற்குச் செல்லும்பொழுது, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்தபோது, என் கையிலிருந்து ஏதோ ஒன்று குதித்துச் சென்றதை உணர்ந்தேன். அப்பொழுது ஆண்டவர், 'நிந்தை இன்றோடு நீங்குகிறது' என்று பேசினார். கடந்த மாதம் நாங்கள் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தோம். கர்த்தர் எங்கள் கடன்பிரச்சனையை மாற்றினார். மேலும் நாங்கள் ஒரு ரூபாய்கூட கொடுக்காமல், என் தாயின் வழியின் மூலமாக இரண்டு நிலங்கள் கிடைக்க உதவிசெய்தார். எப்பொழுதும் மாதக் கடைசியில் கடன் வாங்குவதைப்போல இருக்கும். இந்த மாதத்திலே ஒரு ரூபாய்கூட கடன் வாங்காமல் இருக்கக் கர்த்தர் கிருபை செய்தார்! தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஏஞ்சல், பூந்த மல்லி.

கேன்சர் கட்டி சுகமானது!



கடந்த வருடம் என் தாயாருக்கு நெஞ்சுப் பகுதியில் ஒரு கட்டி இருந்தது. அந்தக் கட்டியை மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு, கேன்சர் கட்டி என்று சொன்னார்கள். அதனால் நாங்கள் குடும்பமாகக் கலங்கி நின்றோம். அதன்பின்பு அதற்கான சிகிச்சைகளை என் தாயாருக்குக் கொடுத்தார்கள். நாங்கள் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு கண்ணீரோடு என் தாயாருக்காக ஜெபித்தோம். பின்பு மருத்துவரிடம் சென்றபொழுது அவர் திரும்பவும் ஸ்கேன் எடுத்து வரச் சொன்னார். அதன் ரிப்போர்ட்டைப் பார்த்தபின்பு மருத்துவர், உங்கள் தாயாருக்கு கேன்சர் வியாதிக்கான எந்த அறிகுறியும் இல்லை என்றார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோ. அஜித் பெனயா, தரமணி.

சொந்தவீடு கொடுத்தார்!



எங்களுக்கு ஒரு சொந்த வீடு வேண்டும் என்று அநேக நாட்களாக ஜெபித்து வந்தோம். 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசீர்வாதப் பெருவிழாவில் **Key chain**ஐ Gift ஆகக் கொடுத்தார்கள். நாங்கள் அதை வாங்கி விசுவாசத்தோடு சொந்த வீட்டிற்காக ஜெபித்து வந்தோம். 2025, பிப்ரவரி மாதம் வீடு கட்டத் துவங்கினோம். டிசம்பர் 14ஆம் தேதி சொந்த வீட்டைப் பிரதிஷ்டைப்பண்ணக் கிருபை செய்தார். இந்த **Key chain**ஐ சொந்த வீட்டின் சாவியில் போட்டு, அந்த வீட்டிற்குக் 'கிருபையின் இல்லம்' என்று பெயர் வைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஜனனி, அரும்பாக்கம்.

காதுப் பகுதியில் சுகம்!



கடந்த வருடம் எனக்குக் காதிற்குப் பின்னால் வலி இருந்துகொண்டேயிருந்தது. அது சரியாகும்படி தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஒருநாள் ஆசீர்வாதம் டிவியை on பண்ணும்போது, சகோதரன் ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது "காதின் பின்பகுதியில் காணப்படுகிற வேதனையைக் கர்த்தர் நீக்கிப் போடுகிறார்" என்று சொல்லி ஜெபித்தார்கள். அந்த நேரத்தில் நானும் அந்த வார்த்தைகளை விசுவாசித்து ஜெபம் பண்ணினேன். அப்பொழுதே காதின் பின்பக்கம் இருந்த வலி நீங்கியது. அன்றிலிருந்து இன்று வரை திரும்ப அந்த வலி வரவேயில்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி கலா எஸ்தர்

கண் பார்வையில் சுகம், அல்சர் வியாதி சுகமானது!



எனக்குக் கடந்த மாதம் கண் பார்வை மங்கிக் காணப்பட்டது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது கண் நன்றாக இருக்கிறது என்று மருத்துவர் கூறினார். நான் கடந்த மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். சகோதரன் ஜெப வேளையில், "கண் வேதனையில் இருக்கிறவர்களுக்குக் கர்த்தர் சுகத்தைத் தருகிறார்" என்று சொன்னார்கள். அந்த நிமிடமே கர்த்தர் எனக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் நான் 2 வருடமாக அல்சர் நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தேன். "நான் இறந்து போய் விடுவேன்" என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு நடந்த "எரிகோ விழும் 7 நாட்கள்" நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது எனக்காகவே ஜெபித்ததுபோல் இருந்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். வேலை செய்யும் இடத்தில் எப்படி சுகமானது என்று ஆச்சரியமாகக் கேட்டார்கள். "நான் ஆசீர்வாதம் டிவியைத்தான் பார்த்தேன், கர்த்தர் எனக்குச் சுகம் கொடுத்தார்" என்று சொன்னேன். என்னுடைய பிள்ளைகளுக்கும் பல வேதனை இருந்தது. "எரிகோ விழும் 7 நாட்கள்" நிகழ்ச்சியிலும், 21 நாட்கள் ஸ்தோத்திரப் பண்டிகையிலும் கலந்து கொண்டு அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் பெற்றுக் கொண்டோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பணி மாறுதல் கிடைத்தது!



என்னுடைய கணவர் Post Man வேலை பார்த்து வருகிறார். அவருடைய பணி மாறுதலுக்காக 6 வருடங்கள் எவ்வளவோ பிரயாசப்பட்டோம். மாற்றம் கிடைக்கவில்லை. ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் தொடர்ந்து கலந்துகொண்டு ஜெபித்து வந்தேன். கர்த்தர் அற்புதமாகப் பணி மாறுதல் கிடைக்க உதவி செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

சொந்த வீட்டைக் கட்ட உதவி செய்தார்!



2021ஆம் ஆண்டு நாங்கள் வீடு கட்ட ஆரம்பித்தோம். பாதியிலே அந்த வீட்டைக் கட்ட முடியவில்லை. தொடர்ந்து ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தேன். சகோதரி தேவசெய்தியில், "ஜெபத்தில் அதிகமாய்ப் பெலப்பட்டு வளருங்கள்" என்று சொன்னார்கள். அதைக் கேட்டு அதிகமாய் ஜெபிக்க ஆரம்பித்தேன். பின்பு ஒருநாள் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன், 2025ஆம் ஆண்டு "உனக்கு நான் ஒரு வீட்டைக் கட்டுவேன். நீ அதிலே குடியிருப்பாய்" என்று சொன்னார்கள். அதன்படி டிசம்பர் 13, 2025ஆம் ஆண்டு வீட்டைப் பிரதிஷ்டைப்பண்ணக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி தேன்மொழி, ஆவடி.

NNF Quiz Competitionனில் வெற்றியைத் தந்தார்!



நான் அரசு மருத்துவமனையில் பச்சிளங்குழந்தைகள் வார்டில் நர்ஸ்-ஆக வேலை பார்த்து வருகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளாக NNF என்ற Quiz Competition நடத்தினார்கள். அதில் தமிழ்நாட்டிலிருந்து எங்கள் மருத்துவமனை மாத்திரம்தான் தகுதி பெற்றிருந்தது. மற்றபடி Aims போன்ற பெரிய பெரிய மருத்துவமனைகளிலிருந்து வந்து கலந்து கொள்வார்கள். 5 வருடங்களும் விடா முயற்சியாய் அதில் கலந்து கொண்டோம். 4 ஆண்டுகளும் எங்களுக்கு ஜெயம் கிடைக்கவில்லை. அதில் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்று ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்து வந்தேன். ஆசீர்வாதத் திருச்சபையில் பொருத்தனைக் காணிக்கைச் செலுத்துவேன் என்று ஜெபித்துச் சென்றேன். கர்த்தர் எங்களுக்குப் பெரிய ஜெயத்தைக் கொடுத்தார். 13 வருடங்கள் கழித்து தமிழ்நாடு வெற்றி பெற்றுள்ளது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி விஜி ஆல்பர்ட், செங்கல்பட்டு.

தேர்வில் வெற்றி பெறச் செய்தார்!



நான் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து ஒரு ACCA என்கிற Examக்குப் Prepare பண்ணிக்கொண்டிருந்தேன். அது Chartered Account Examதான். அது மிகவும் கஷ்டமாக இருக்கும். பிப்ரவரி மாதம் ஆசீர்வாதம் டிவியில் சகோதரி அவர்கள் தேர்வுக்குத் தயாராகிறவர்களுக்காக ஜெபம் ஏறெடுத்தார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணி மார்ச் மாதம் தேர்வு எழுதினேன். ரிசல்ட் வரும்போது பாஸ் ஆவதற்கு ஒரு மதிப்பெண் குறைவாக இருந்தது. அதினால் மிகவும் வேதனைப்பட்டேன். திரும்பவும் ஜூன் மாதம் அதே தேர்வை மீண்டும் எழுதினேன். அதற்கு முன்பு பொருத்தனை ஜெபம் செய்துவிட்டுப்போனேன். திரும்பவும் ரிசல்ட் வரும்போது பாஸ் ஆவதற்கு ஐந்து மதிப்பெண்கள் குறைவாக இருந்தது. இதனால் நான் மிகவும் சோர்வடைந்து இனித் தேர்வு எழுத வேண்டாம் என்று எண்ணியிருந்தேன். பின்பு, 'உமக்குச் சித்தமானால் எனக்குக் கிடைக்கட்டும்' என்று சொல்லி செப்டம்பர் மாதம் அந்தத் தேர்வைத் திரும்பவும் எழுதினேன். பின்பு ஒருநாள் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் செய்தி கொடுத்தார்கள். அதில் "நீங்கள் ஒரு காரியத்திற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். அது உங்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அப்படியிருந்தால் சங்கீதம் 115:1 ஆம் வசனத்தை "எங்களுக்கு அல்ல கர்த்தாவே, எங்களுக்கு அல்ல..." எனச் சொல்லி ஜெபிக்கச் சொன்னார்கள். நான் அந்த வசனத்தை விசுவாசித்து தொடர்ந்து ஜெபித்தேன். அக்டோபர் 13ஆம் தேதி ரிசல்ட் வந்தது. எதிர்பாராத நேரத்தில் ஆண்டவருடைய கிருபையினால் நான் அந்தத் தேர்வில் வெற்றி பெற்று விட்டேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி கெரன் கிரேஸ், வேலூர்.

அலர்ஜி சுகமானது!



நான் ஆகஸ்ட் மாதம் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெப எண்ணெய் வாங்கிச் சென்றேன். ஒருநாள் இரவு திடீரென்று என் மகனுக்கு சரீரமெல்லாம் அலர்ஜி ஏற்பட்டது. அப்பொழுது நான் ஜெபஎண்ணெயை என் மகன் மீது பூசி பாரத்தோடு ஜெபித்தேன். ஆண்டவரே, "உம்முடைய அற்புதத்தை என்னுடைய கண்ணும், என் மகனுடைய கண்ணும் காண வேண்டும் ஆண்டவரே" என்று சொல்லி ஜெபித்துப் படுத்துவிட்டேன். காலையில் எழுந்து பார்த்தபொழுது அலர்ஜி வந்ததன் தடயமே இல்லாதபடிக்குக் கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்திருந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி லீதியாள், வில்லிவாக்கம்.

பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை!



நான் ஆசீர்வாதம் டிவியைத் தினமும் பார்த்துக் கொண்டேயிருப்பேன். எனக்கான வார்த்தைகளைக் கர்த்தர் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் மூலமாகக் கொடுப்பார்கள். எனக்குக் காதில் இரைச்சல் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. உச்சந் தலையில் இரத்தம் நின்று நின்று ஓடுவதுபோல் இருந்தது. மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். கடந்த ஆண்டு நடந்த "எரிகோ விழும் 7 நாட்கள்" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். 3 நாட்கள் கழித்து என்னுடைய காதிலிருந்து ஒரு ஆவி வெளியேறியதைப் பார்த்தேன். கர்த்தர் எனக்குப் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி ஹெப்சிபா, தேனி.

திருமண தடையை நீக்கி, மகளின் திருமணத்தை ஆசீர்வதித்தார்!



என்னுடைய மகளுக்குத் திருமணத்திற்காக வரன் பார்த்துக் கொண்டிருக்கையில் செய்வினைப் போராட்டத்தினால் தடைபட்டுக் கொண்டேயிருந்தது. குடும்பத்தில் சண்டை, பிரிவினை இருந்தது. இதனால் சமாதானம் இல்லாமல் இருந்தோம். சகோதரன் ஜெப வேளையில், "கானாவூர் கல்யாணவீட்டில் அற்புதம் நடந்ததுபோல் உங்கள் வீட்டில் அற்புதம் நடக்கும். கர்த்தர் உன் கண்ணீரை மாற்றுவார்" என்று சொன்னார்கள். நாங்களும் ஒரு மாதமாக அந்த வார்த்தையைச் சொல்லி சொல்லி ஜெபித்தோம். கர்த்தர் நல்ல மகனைக் கிருபையாகக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோதரி இந்திரா, புதூர்.



பாலைவனத்தில் ரயில் பாதை!


கோபிப் பாலைவனத்தில் 2,000 கி.மீ. அதிவேக ரயில் பாதை போட்டு சீனா சாதனை!

சாத்தியமே இல்லை என்று உலக நாடுகளால் சொல்லப்பட்ட பிரம்மாண்ட திட்டத்தைச் சீனா நிஜமாக்கிக் காட்டியுள்ளது. கொளுத்தும் வெயில், சுழன்றியடிக்கும் மணல் புயல் எனச் சவால்கள் நிறைந்த கோபிப் பாலைவனத்தைக் கடந்து, சுமார் 2,000 கிலோமீட்டர் நீளத்திற்கு அதிவேக ரயில் பாதையை அமைத்துச் சீனா உலகை வியக்க வைத்துள்ளது.

சீனாவின் கிழக்குக்கரைப் பகுதிகள் பொருளாதார ரீதியாகச் செழிப்பாக இருந்தாலும், மேற்குப் பகுதி நீண்ட காலமாகப் பின்தங்கியே இருந்தது. பொருளாதார இடைவெளியைக் குறைக்கவும், போக்குவரத்தை எளிதாக்கவும் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் 20 மணி நேரமாக இருந்த பயண நேரம், தற்போது 12 மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பாலைவனத்தில் தரை நிலையானது அல்ல என்பதால், பொறியாளர்கள் பல புதுமையான நுட்பங்களைக் கையாண்டுள்ளனர்.

காற்று வீசும்போது மணல் மேடுகள் நகரக் கூடாது என்பதற்காக,வைக்கோல் மற்றும் மூங்கில் கொண்டு தரையில் பிரம்மாண்டமான வலைப் பின்னல் அமைப்புகள் (Sand Grids) உருவாக்கப்பட்டன. மணல் மேடுகள் தண்டவாளத்தை மூடிவிடாமல் இருக்க, பல இடங்களில் ரயில் பாதை தரையில் அமைக்கப்படாமல், ராட்சதத் தூண்கள் மூலம் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கோபிப் பாலைவனத்தில் மணிக்கு 190 கி.மீ வேகத்தில் வீசும் காற்று ரயிலையே கவிழ்க்கக் கூடிய வலிமைக் கொண்டது. இதனைத் தடுக்க தண்டவாளத்தின் இருபுறமும் பிரத்யேக காற்றுத் தடுப்புச் சுவர்களும், செயற்கைச் சுரங்கப்பாதைகளும் கட்டப்பட்டுள்ளன. இந்த ரயில் பாதைப் பாலைவனத்தை மட்டும் கடக்காமல், கடல் மட்டத்திலிருந்து 3,607 மீட்டர் உயரத்தில் உள்ள சிலியன் மலைத்தொடர் வழியாகவும் பயணிக்கிறது. கடும் குளிர் மற்றும் ஆக்சிஜன் குறைபாடு போன்ற சவால்களையும் முறியடித்து, உலகின் மிக உயர்ந்த அதிவேக ரயில் பாதைகளில் ஒன்றாக இது சாதனைப் படைத்துள்ளது.



இந்த ஒரு ரயில் பாதைச் சீனாவின் மேற்குப் பகுதியின் தலையெழுத்தையே மாற்றியுள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்கள் தற்போது மிகப்பெரிய பொருளாதார மையங்களாக உருவெடுத்துள்ளன. சுற்றுலாப் பயணிகளின் வருகை பல மடங்கு அதிகரித்துள்ளது. ராணுவ ரீதியாக, எல்லைப் பகுதிகளுக்கு வீரர்களையும் தளவாடங்களையும் மிக விரைவாகக் கொண்டு செல்ல இது சீனாவுக்குப் பெரும் பலத்தைத் தந்துள்ளதாகப் பார்க்கப்படுகிறது.





■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

நமது ஆசீர்வாதம் தொலைக்காட்சி ஊழியத்தில் உங்கள் பங்கு!

கணக்கற்ற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தேவஆசீர்வாதத்தைக் கொண்டு செல்லவும் காரணமாக இருக்கும் நமது ஆசீர்வாதம் டிவி ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்! ஒவ்வொரு மாதமும் இதற்காகச் செலவுபண்ணும் தொகை மிகவும் அதிகம். நமது தொலைக்காட்சியில் விளம்பரங்களோ அல்லது பண ஆதாயத்திற்கான எந்த நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுவதில்லை. நிகழ்ச்சிகள், பாடல்கள் கொடுக்கும் தேவ ஊழியர்களிடம் ஒளிபரப்புத்தொகை எதுவும் வாங்குவதில்லை. மேலும் எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் இதற்கு இல்லை. இந்த டிவி நிகழ்ச்சியின்மூலம் பிரயோஜனமடைந்து வரும் தேவப்பிள்ளைகள் 5 அப்பம் 2 மீனுக்கு அடையாளமாகக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டுதான் இதன் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. Satelliteக்குச் செலுத்தப்படும் தொகை, கேபிள் டிவி இணைப்புகள் மற்றும் DTHல் (AIRTEL, SUN DIRECT) ஒளிபரப்பப்படுவதற்காகும் செலவு, நிகழ்ச்சிகள் தயாரிப்புகளுக்காகும் செலவு, ஊழியத்தில் பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்குக் கொடுக்கும் ஊதியம், உபகரணங்கள் பராமரிப்பு... என்று ஒவ்வொரு மாதமும் பல லட்சங்கள் தேவை உண்டு.

குக்கிராமங்களிலும் பட்டணங்களிலும் படித்த மற்றும் படிக்காத தேவப்பிள்ளைகளுக்கு வசனம் எளிதில் சென்றுசேர, கர்த்தர் இந்தக் கிருபையின் நாட்களில் நமக்கு ஈவாகக் கொடுத்திருப்பதுதான் ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள்! எனவே இந்த ஊழியத்தை ஒருவராய்ச் சுமப்பது அரிது.

"நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்." - ஏசாயா 32:20. "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." -2கொரி.9: 6,7. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

துதியுங்கள்! ஜெபியுங்கள்!


அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் (2கொரிந்தியர் 1:11).

அநேகருடைய ஸ்தோத்திரங்களினால் கிருபை பெருகும் (2கொரி. 4:15) என்று எழுதியிருக்கிறபடி தேவகிருபை, தேவதயவு, தேவமகிமை ஊழியத்திலும் எங்களிலும் பெருகும்படிக்கு எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் தினமும் குறைந்தபட்சம் 300 ஸ்தோத்திரபலிகளை நீங்கள் ஏறெடுக்கவும், குறைந்தது 15 நிமிடங்கள் விண்ணப்பங்களைத் தேவனிடத்தில் ஏறெடுக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.



வெள்ளிக்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதம் டிவி ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்! செவ்வாய்க்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதத் திருச்சபை (சுமார் 600 கிளைத் திருச்சபைகள்) ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்!

நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்!



9952432020@tmb என்ற UPI ID

மூலமாக எந்த Payment Appலிருந்தும் பணம் அனுப்பலாம்.

G Pay | PhonePe | paytm

9952432020 (Blessing TV)
9345678981 (Allen Paul)

என்ற எண்ணிற்கு உங்கள் காணிக்கைகளை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம், Mobile Internet மூலம் காணிக்கை அனுப்பும் விபரம்:

www.blessingtv.tv/donation என்ற இணையதள முகவரியில் உங்கள் Debit card மூலம் நேரடியாகக் காணிக்கை அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.

வங்கி மூலம்

ICICI	TMB
'BLESSING TV'	'BLESSING TV'
A/C No. : 6172 0103 4129	A/C No. : 0041 5031 0875 177
BRANCH : SIVAKASI	BRANCH : VIRUDHUNAGAR
IFS CODE - ICIC 000 6172	IFS CODE : TMBL 000 0004

மணியார்டர் / eMo மூலம்

மணியார்டர் வாயிலாகக் காணிக்கை அனுப்புகிறவர்கள் நமது முகவரிக்கு நேரடியாகக் காணிக்கை அனுப்பலாம். மணியார்டர் படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உள்ள முழு முகவரியையும் பங்காளர் எண்ணையும் தெளிவாக எழுத மறவாதிருங்கள்!

டி.டி. / செக் மூலம்

டி.டி. மற்றும் செக் மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 'BLESSING TV' என்ற பெயரில் உங்களுடைய டி.டி. மற்றும் காசோலையைத் தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம்.

Powered by Razorpay



JESUS LOVES
Blessing TV

வங்கி மூலம் நேரடியாகக் காணிக்கைச் செலுத்துவோர், தயவாகத் தங்கள் ரசீதுதனை (ஜெராக்ஸ்) எங்களுக்கு அனுப்பி, ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் இவ்வாறு அனுப்ப இயலாதவர்கள், கீழ்க்காணும் தொலைபேசி எண்களுக்கு SMS மூலமாக உங்கள் பெயர், முகவரி மற்றும் காணிக்கை விபரங்களை அனுப்பிவிடலாம். WhatsApp அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரியப்படுத்தலாம். Whatsapp : 9994079994, 9952432020.

முகவரி: பிளஸ்ஸிங் டி.வி, எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர் - 626 003, தமிழ்நாடு. (அல்லது)
பிளஸ்ஸிங் டி.வி, எண். 3, இரண்டாம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010, தமிழ்நாடு.
Our Address : BLESSING TV, REVIVAL PRAYER CENTRE, SOOLAKKARAI, VIRUDHUNAGAR - 626 003, TAMILNADU. (or)
BLESSING TV, No. 3, Second Street, Kilpauk Garden Road, Kilpauk, CHENNAI - 600 010, TAMILNADU.
Email : allenbtv@gmail.com Website : www.blessingtv.tv

மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ள : 9994 07 9994 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை)

கிளை அலுவலகங்கள்!

கீழ்ப்பாக்கம்
எண். 3, இரண்டாம் தெரு,
கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு,
கீழ்ப்பாக்கம், சென்னை – 10.

எக்மோர்
No. 5A/5, காந்தி இர்வின் ரோடு,
இம்பீரியல் ஹோட்டல் அருகில்,
எக்மோர் ரயில் நிலையம் எதிரில்,
எக்மோர், சென்னை – 8.

தாம்பரம்
69, அரசன் காம்ப்ளக்ஸ்,
No. 70, G.S.T. ரோடு,
பஸ்டாண்டு – ரயில் நிலையம் எதிரில்,
மேற்குத் தாம்பரம்,
சென்னை – 45.

திருவான்மியூர்
எண். 121, 5வது கிழக்குத் தெரு,
காமராஜர் நகர்,
பாம்பே டையிங் பின்புறம்,
(பாங்க் ஆஃப் பரோடா எதிரில்)
திருவான்மியூர். சென்னை – 41.

நாகர்கோவில்
டேவிட காம்ப்ளக்ஸ்,
WCC, ரோடு,
WCC, பஸ் நிறுத்தம் அருகில்,
நாகர்கோவில் – 1.

ஈரோடு
விஜி காம்ப்ளக்ஸ்,
இந்தியன் வங்கி எதிரில்,
பெரியார் நகர், ஈரோடு – 638 001.

போரூர்
6/85, குன்றத்தூர் மெயின் ரோடு,
காவேரி ஸ்வீட் ஸ்டால் மாடியில்,
சென்னை மொபைல்ஸ் எதிரில்,
போரூர், சென்னை – 600 116

வேளச்சேரி
1A, 100 அடி, தரமணி லிங்க் ரோடு,
வேளச்சேரி விஜயநகர்
பஸ் டெர்மினஸ் எதிரில்,
வேளச்சேரி, சென்னை – 600 042.

பெரம்பூர்
No. 103, பெரம்பூர் வியாசர்பாடி
ஹை ரோடு, குமாரசாமி தெரு,
பஸ் டெர்மினஸ் to
P.P. ரோடு அருகில்,
பெரம்பூர், சென்னை – 600 011.

ஆவடி
No. 230, CTH ரோடு,
செக்போஸ்ட் அருகில்,
இம்மாகுலேட் பள்ளி எதிரில்,
ஆவடி, சென்னை – 600 054.

சேலம்
R.B.T. மால், முதல் மாடி,
A.R.R.S. மல்டி பிளக்ஸ் ரோடு,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
சேலம் – 4.

கோயம்புத்தூர்
நம்பர் 203, 2ஆவது மாடி,
ஸ்ரீவாசவி காம்ப்ளக்ஸ்,
பெரிய கடை வீதி,
மணிக்கூண்டு அருகில்,
கோயம்புத்தூர் – 641 001.

கோயம்புத்தூர் (காந்திபுரம்)
878, சத்தியமங்கலம்
மெயின் ரோடு,
G.P. மருத்துவமனை எதிரில்,
காந்திபுரம்,
கோயம்புத்தூர் – 641 012.

திருச்சி
ஸ்டோனி மெடோஸ், தரைத்தளம்,
169, 10வது மெயின் ரோடு,
E.S.I. மருத்துவமனை எதிரில்,
பொன் நகர், திருச்சி – 1

திருநெல்வேலி
16/40, திருவனந்தபுரம் ரோடு,
பாரத ஸ்டேட் வங்கி அருகில்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.

வேலூர்
No. 5, KGM. காம்ப்ளக்ஸ்,
அரணி ரோடு,
பாகாயம் பஸ்டாண்டு அருகில்,
பாகாயம், வேலூர் – 2.

திண்டுக்கல்
அல்லேலூயா ஹோம்,
A/56, MVM நகர்,
திண்டுக்கல் – 624 001.

மதுரை
தாமஸ் காம்ப்ளக்ஸ்
கிரேஸ் பல்மருத்துவமனை மாடியில்,
46, நேதாஜி ரோடு,
மதுரை – 625 001.

BLESSING CENTRE
39, மணலி நெடுஞ்சாலை, மஞ்சம்பாக்கம், மாதவரம், சென்னை – 60.

மேற்கண்ட ஆசீர்வாதம் டிவியின் கிளை அலுவலகங்களுக்கு நீங்கள் நேரில் சென்று உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளலாம். மேலும், சகோதரிகளாகிய உங்களுக்கு நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் அங்குச் சென்று தேவனுக்குத் துதி ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கலாம்.



தெரிந்து கொள்வோமா!

சியா விதைகள்

அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் நிறைந்த சியா விதைகள், சால்வியா ஹிஸ்பானிகா எனப்படும் பூக்கும் தாவரத்தின் உண்ணக்கூடிய பாகமாகும். ஒரு அவுன்ஸ் சியா விதைகளில் 11 கிராம் நார்ச்சத்து, 4 கிராம் புரதம், 5 கிராம் ஒமேகா 3 பேட்டி ஆசிட் ஆகியவை நிரம்பியுள்ளது. இது தவிர 18 சதவீதம் கால்சியம், 30 சதவீதம் மெக்னீசியம், 27 சதவீதம் பாஸ்பரஸ் ஆகியவை உள்ளன. வெறும் 137 கலோரிகள் மட்டுமே உண்டு.

ஓமேகா-3 கொழுப்பு அமிலங்கள் அதிகம் :

சியா விதைகள் ஆல்பா-லினோலெனிக் அமிலத்தின் (ALA) வளமான தாவர ஆதாரங்களில் ஒன்றாகும். சியா விதைகளில் இந்த ஓமேகா-3 மற்றும் ஓமேகா-6 கொழுப்பு அமிலங்கள் மற்ற தாவர மூலங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளன. ஓமேகா கொழுப்பு அமிலங்கள் உங்கள் இதயத்தைப் பாதுகாத்தல், ஆரோக்கியமான இரத்தச் சர்க்கரையை மேம்படுத்துதல் மற்றும் உங்கள் மன ஆரோக்கியத்தை ஆதரித்தல் போன்ற ஆரோக்கிய நலன்களை வழங்குகின்றன என்று அமெரிக்க தேசிய மருத்துவ நூலகம் கூறுகிறது.



நார்ச்சத்தின் சிறந்த ஆதாரம்:

சரிமான ஆரோக்கியத்திற்கும் வழக்கமான குடல் இயக்கத்தை மேம்படுத்துவதற்கும், ஒட்டுமொத்த குடல் ஆரோக்கியத்திற்கும் நார்ச்சத்து மிக முக்கியமானது. சியா விதைகளில் சுமார் 92% அளவுக்கு நார்ச்சத்து நிரம்பியுள்ளது. இந்த நார்ச்சத்து என்பது கரையும் தன்மைக் கொண்டது. நம் குடலில் உள்ள நன்மைப் பயக்கும் பாக்டீரியாக்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. இதனால் குடல் நலன் மேம்படும். நல்ல குடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்க நார்ச்சத்து அவசியம். ஆனால் அதிகமாக உட்கொள்வது சரிமான பிரச்சனைகளை ஏற்படுத்தும்.



எடை இழப்புக்கு உதவும் பொருட்கள்:

நிரம்பிய புரதச் சத்து மற்றும் நார்ச்சத்து போன்றவை இருப்பதால் உடல் எடையை குறைக்க உதவிகரமாக இருக்கும். இதைச் சாப்பிடும்போது வயிறு நிரம்பிய உணர்வு ஏற்படும். பலருக்கு சியா விதைகளுக்கு ஒவ்வாமை இருக்கலாம். அந்த வகையில் ஒவ்வாமை இருப்பவர்களுக்கு, வயிற்று வலி, தோலில் அரிப்பு, வீக்கம் போன்ற பிரச்சனைகள் ஏற்படும்.

எலும்பு ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது:

நமது எலும்புகளுக்கு வலுவூட்டக் கூடிய கால்சியம், புரதம், மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் போன்ற சத்துகள் சியா விதைகளில் இருக்கிறது. பால் பொருட்களைத் தவிர்ப்பவர்களுக்கு கால்சியம் சத்து கிடைக்க உதவியாக இருக்கும்.

இரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்துகிறது:

சியா விதைகளை உட்கொள்வது இன்சுலின் அளவைக் கட்டுப்படுத்தவும் இரத்த சர்க்கரைக் கட்டுப்பாட்டை மேம்படுத்தவும் உதவும், குறிப்பாக வகை-2 நீரிழிவு நோய் அல்லது இன்சுலின் எதிர்ப்பு உள்ளவர்களுக்கு இது நன்மைப் பயக்கும். நீரிழிவு நோயாளிகள், இன்சுலின் எடுத்துக் கொண்டால் இந்த விதைகளைச் சாப்பிடவே கூடாது.

இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது:

சியா விதைகளில் உள்ள ஓமேகா-3 கொழுப்பு அமிலங்கள் மற்றும் நார்ச்சத்து, கெட்ட கொழுப்பின் (LDL) அளவைக் குறைத்து, இரத்த அழுத்தத்தைக் குறைப்பதன் மூலம் இதய ஆரோக்கியத்திற்குப் பங்களிக்கின்றன. குறிப்பாக ரத்தத்தில் உள்ள ட்ரிகிளைசைரைடு கொழுப்பை இது கரைக்கிறது. இன்சுலின் சுரப்பு அதிகமாகிறது. உடலுக்கு நன்மைப் பயக்கும் ஹெச்டிஎல் கொழுப்பு அதிகரிக்கும்.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

விருதுநகர் உபவாசக் கூட்டம்

17.01.2026



ஒவ்வொரு மாதமும் 3வது சனிக்கிழமை விருதுநகர் எழுப்புதல் ஜெப மையத்தின் அருகில் அமைந்துள்ள நமது வளாகத்தில் வைத்து ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதில் அநேக தேவப்பிள்ளைகள் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களையும் விடுதலையையும் பெற்றுச் செல்கின்றனர்.

பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி (சனிக்கிழமை) ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டம் நடைபெற இருக்கிறது.

தேவப்பிள்ளைகள் குடும்பத்தோடு கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரங்கள்!

முதல் ஆராதனை : காலை 5 மணி முதல் 6 மணி வரை

இரண்டாம் ஆராதனை : காலை 7 மணி முதல் 9 மணி வரை

மூன்றாம் ஆராதனை : காலை 10 மணி முதல் 12 மணி வரை

சென்னை:
தூய ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 10.

மேலும் விபரங்களுக்கு :
93456789 83
9994 07 9994

விருதுநகர் ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரம்!

காலை 10 மணி
முதல் 12 மணி வரை

விருதுநகர்:
எழுப்புதல் ஜெப மையம்,
சூலக்கரை,
விருதுநகர்.